


■ சென்னை மாநகராட்சி பகுதிகளில் மாபெரும் சாலைகள் திட்டத்தை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தொடங்கி வைத்போது எடுத்தபடம்.

## சென்னை மாநகராட்சி பகுதிகளில்

# "மாபெரும் சாலைகள் திட்டங்கள்"

## அமைச்சர் எஸ்.பி. வேலுமணி தொடங்கி வைத்தார்

**சென்னை, பிப். 12–**

**சென்னை மாநகராட்சி பகுதிகளில் "மாபெரும் சாலைகள் திட்டங்கள்" அமைச்சர் எஸ்.பி.வேலுமணி குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் "மாபெரும் சாலைகள் திட்டங்கள்" செயல்படுத்துவதற்கான தொடக்க நிகழ்ச்சியினை அமைச்சர் எஸ்.பி. வேலுமணி நேற்று சென்னை லீலா பேலஸ் கூட்டரங்கில் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். அரசு தலைமைச் செயலாளர் கே.சண்முகம், தலைமை தாங்கினார். பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் கோ.பிரகாஷ் வரவேற்றார்.

தொடர்ந்து, நகர்ப்புற பகுதிகளில் மேற்கொள்ளப்பட உள்ள பெரிய மெகா சாலைகள் அனைத்திற்கும் சாலைகள் வடிவமைப்பு திட்டத்திற்கான வழிகாட்டுதல் கொள்கைகளை ஏற்றுக் கொள்வதற்கான புத்தகத்தை நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் வெளியிட்டார். "மாபெரும் சாலைகள் திட்டங்கள்" குறித்து வைக்கப்பட்டுள்ள கண்காட்சியினை பார்வையிட்டார்.

இதுகுறித்து அமைச்சர் தெரிவிக்கையில், இத்திட்டம் செயல்படுத்தப்படும் இடங்களில் பேருந்து சாலைகள் முழுமையான சாலைகளாக மாற்றியமைக்கப்படும். இத்திட்டத்தில் 426 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில், 400 கி.மீ. நீளமுள்ள பேருந்து சாலைகள் மற்றும் மற்ற துறைகளிடம் உள்ள 286 கி.மீ. நீளமுள்ள பிரதான சாலைகளும் படிப்படியாக மேம்படுத்தப்படும்.

இதன் முதற்கட்டமாக 70 சதுர கிலோ மீட்டர் அடங்கிய 110 கி.மீ. நீளமுள்ள பேருந்து சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகள் அண்ணாநகர், தண்டையார்பேட்டை, நுங்கம்பாக்கம், மயிலாப்பூர், வேளச்சேரி மற்றும் அடையார் போன்ற இடங்களில் செயல்படுத்தப்படும்.

கீழ்க்கண்ட பிரதான சாலைகள் இத்திட்டத்தில் அமைக்கப்பட உள்ளது.

1. டாக்டர். இராதகிருஷ்ணன் சாலை, கதீட்ரல் ரோடு, 2. காந்தி மண்டபம் சாலை, சர்தார் பட்டேல் ரோடு, 3. எல்.பி. சாலை, திருவொற்றியூர் நெடுஞ்சாலை 4. வடக்கு டெர்மினஸ் சாலை, நியூ ஆவடி சாலை 5. 2வது மற்றும் 3வது அவென்யூ சாலை அண்ணாநகர்.

6. ராயப்பேட்டை நெடுஞ்சாலை, கச்சேரி ரோடு. 7. கிரீன்வேஸ் சாலை, சி.பி. இராமாசாமி சாலை

8. எல்டாம்ஸ் சாலை, ரேஸ் கோர்ஸ் ரோடு. 9. வேளச்சேரி பிரதான சாலை, ஐந்து பர்லாங் சாலை

இத்திட்டத்தை அமுல்ப்படுத்தும் விதமாக சென்னை மாநகராட்சி, சர்வதேச வல்லுநர்கள் இணைந்து இதற்கான வடிவமைப்பு, திட்டமிடுதல், கட்டுமானம் மற்றும் சீராய்வு ஆகிய பணிகளை மேற்கொள்ளும்.

இதுமட்டுமல்லாமல், இத்திட்டம் தமிழக அளவில் கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், திருப்பூர், ஈரோடு, திருநெல்வேலி, தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகிய நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்றார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு மின்சார வாரிய தலைவரும், மேலாண்மை இயக்குநரும், கூடுதல் தலைமைச் செயலாளருமான விக்ரம் கபூர், சென்னைப் பெருநகர காவல் ஆணையர் ஏகே.விஸ்வநாதன், தமிழ்நாடு போக்குவரத்து துறை முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ், சென்னை மெட்ரோ ரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் பங்கஜ் குமார் பேன்சல், நகராட்சி நிர்வாக ஆணையர் கா.பாஸ்கரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் த.ந.ஹரிஹரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய செயல் இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர், துணை ஆணையாளர் (பணிகள்) பி.குமாரவேல் பாண்டியன், துணை ஆணையர் (சுகாதாரம்) பி.மதுசுதன் ரெட்டி, துணை ஆணையாளர் (கல்வி) கிரேஸ் லால்ரின்டிகி பச்சுவாவ், வட்டார துணை ஆணையாளர்கள் பி.ஆகாஷ், பி.என். ஸ்ரீதர், டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஷ், கே.எஃப். டபுள்யூ, ஆசிய பன்னாட்டு வங்கி பிரதிநிதிகள் உட்பட பல கலந்து கொண்டனர்.